பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 05 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாணவர்கள் கல்வி மூலம் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு பற்றாக்குறை இல்லை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. மத்திய அரசு வெளியிட்டுள்ள பள்ளி மேலாண்மைக்குழு வழிகாட்டு நெறிமுறைகள், தனியார் பள்ளிகளுக்கு பொருந்தாது என்று மத்திய கல்வி அமைச்சகம் கூறியுள்ளது.

4. இலங்கையில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

5. துருக்கி சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் — விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

. . இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

மாணவர்கள் கல்வி மூலம் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தம்மை சந்தித்த ஆந்திர மாநிலம் குண்டூரை சேர்ந்த அரசுப்பள்ளி மாணவர்களுடன் உரையாடிய அவர், தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து கவலையடைய வேண்டாம் என்று அறிவுறுத்தினார்.

அரசு பள்ளிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், அதற்கான கட்டமைப்பை மேம்படுத்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்காற்ற வேண்டும் என்று கூறினார்.

கல்வி சுற்றுலாவுக்கு வந்த இந்த குழுவில் 27 மாணவிகளும் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு பற்றாக்குறை இல்லை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா,

நாளொன்றுக்கு 47 ஆயிரம் டன் சமையல் எரிவாயு உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களில் ஒரு கோடியே 34 லட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த மார்ச் மாதத்தில் இருந்து இதுவரை குழாய் மூலம் சமையல் எரிவாயு இணைப்பு 7 லட்சத்து 60 ஆயிரம் வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கூறிய திருமதி சுஜாதா சர்மா, எட்டு லட்சம் பேர் இதற்காக பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு வெளியிட்டுள்ள பள்ளி மேலாண்மைக்குழு வழிகாட்டு நெறிமுறைகள், தனியார் பள்ளிகளுக்கு பொருந்தாது என்று மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில், வெளிப்படைத் தன்மையுடனான நிர்வாகத்திற்கு பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

அரசு, பள்ளிகள், பெற்றோர், சமூகத்தினர் ஒருங்கிணைந்து கல்வித் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

பள்ளிகளின் செயல்பாடுகளை சீராக நடத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு அனைவருக்கும் சுகாதார வசதிகள் வழங்க முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உயிரி தொழில்நுட்பத்துறையில், மரபியல் ரீதியிலான நோய்களை கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இதன்மூலம், குறைந்த செலவில் சோதனைகள் மேற்கொண்டு உரிய சிகிச்சை அளிக்க முடியும் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ரயில் விபத்துகள் குறித்த ஆரம்ப நிலை விசாரணை தொடர்பாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் புதுதில்லியில் உயர்மட்ட ஆய்வுக்கூட்டம் நடத்தினார்.

அண்மையில், ரயில்களில் ஏற்படும் தீ விபத்துகள் குறித்து ஆலோசனை மேற்கொண்ட அவர், ரயில்வே பாதுகாப்புப்படை இதுதொடர்பான விசாரணைகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

சமூக விரோதிகளின் செயல்பாடுகள் இந்த விபத்துகளில் எந்த அளவுக்கு ஏற்பட்டுள்ளது என்பதை கண்காணித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும், விபத்துகளை தவிர்ப்பதில் தகவல் சேகரிப்பு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிசிடிவி கேமராவில் பதிவு செய்யப்பட்ட காட்சிகள், சந்தேகிக்கப்படும் நபர்கள் பயன்படுத்தும் தொலைபேசி உரையாடல்களை கண்காணித்தல், சைபர் பாதுகாப்பு முறைகளை வலுப்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு தொடர்பான கண்காணிப்பு ஆகியவற்றை வலுப்படுத்தி, விபத்துகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>>

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், உலகளாவிய பிரச்சினையின்போதிலும் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்ததாக கூறினார்.

நிதி பற்றாக்குறை குறித்து அரசு துறைகளுடன் ஒருங்கிணைந்து தீர்வுகாணப்படும் என்று திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இலங்கையில் நடப்பாண்டு **30** ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இலங்கை தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், **15** பேர் இந்த காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இலங்கையில் **22** ஆயிரத்து **500** பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு, **Kandy,** ரத்னபுரா உள்ளிட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவது குறித்து பொதுமக்கள், மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக இலங்கை சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

தீவிரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற தீவிரவாதத்துக்கு எதிரான 11-ஆவது பிரிக்ஸ் குழு கூட்டத்தில் உரையாற்றிய வெளியுறவுத்துறை மேற்கு பிராந்திய செயலர் திரு சிபி ஜார்ஜ், எல்லை தாண்டிய தீவிரவாதத்தை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

தீவிரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தீவிரவாதத்துக்கு நிதியுதவி அளிக்கப்படுவதை தடுக்க உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு சிபி ஜார்ஜ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நடப்பாண்டில் கைலாஷ் மானசரோவர் புனித யாத்திரை மேற்கொள்ளும் யாத்ரிகர்களுக்கான கணினி குலுக்கல் முறையை

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

அடுத்த மாதம் தொடங்கும் இந்த யாத்திரை ஆகஸ்ட் மாதத்தில் நிறைவுபெறும்.

இந்த யாத்திரையில் மொத்தம் ஆயிரம் யாத்ரிகர்களின் பெயர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும், கணினி உதவியுடன் கூடிய இந்த குலுக்கல் முறை வெளிப்படையாக நடத்தப்பட்டது என்றும் அரசின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

குழுவிற்கு **50** பேர் என்ற எண்ணிக்கையில் **20** குழுக்கள் **Lipulekh** மற்றும் **Nathula** மலைப்பாதை வழியாக இந்த யாத்திரையை மேற்கொள்வார்கள் என்று அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பான கூடுதல் விவரங்கள் இணையதளத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும் **0 1 1 2 3 0 8 8 2 1 4** என்ற தொலைபேசி எண் வாயிலாகவும் தெரிந்துகொள்ளலாம்.

<<<<<<>>>>>>

சர்வதேச கடல் பகுதியில் இந்திய மாலுமிகளின் பாதுகாப்புக்காக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய கப்பல்துறை கூடுதல் செயலர் திரு முகேஷ் மங்கல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுவரை வளைகுடா பகுதிகளிலிருந்து 3 ஆயிரத்து 300 மாலுமிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் துறைமுகங்கள் தடையின்றி செயல்பட்டு வருவதாக திரு முகேஷ் மங்கல் கூறினார்.

<<<<<<>>>>>>

கேரளம் சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு இடைக்கால பேரவைத் தலைவர் திரு ஜி சுதாகரன் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

சட்டப்பேரவைத் தலைவர் பதவிக்கான தேர்தல் நாளை நடைபெறுகிறது.

ஆளும் ஐக்கிய ஜனநாயக முன்னணி சார்பில் திருவஞ்ஜூர் ராதாகிருஷ்ணன் போட்டியிட உள்ளார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் — விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **6-4, 6-4** என்ற செட் கணக்கில், துருக்கியின் **Ergi Kirkin — ரஷ்யாவின் Marat Sharipov** இணையை வென்றது.

-------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-------------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Svarmanyu Singh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **7-6, 3-6, 6-1** என்ற செட் கணக்கில், யுக்ரைனின் **Vasyl Makarenko**-வை வென்றார்.

---------------

லாகோஸ் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் — மணிக்கா பத்ரா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **11-1, 11-6, 11-7** என்ற செட் கணக்கில், நைஜீரியாவின் **Taiwo Mati — Favour Ojo** இணையை வென்றது.

இப்போட்டியில் **Manush Sha — Diya Chital** இணையும், **Harmeet Desai — Yashaswini Ghorpade** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Manush Sha** - மனவ் தாக்கர் இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Ayhika Mukherjee** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>>**